# கிறிஸ்துவின் ஒளியில்
# நிறுவுநரின் வழியில்
# எளியோரின் தோழமையில்...




## 31-வது பொதுப் பேரவையின்
## தீர்மானங்கள், பரிந்துரைகள்

# FRANCISCAN SISTERS OF SAINT ALOYSIUS GONZAGA
# PUDUCHERRY

# "ACCOMPANYING THE POOR, IN THE LIGHT OF CHRIST AND IN THE FOOTSTEPS OF OUR FOUNDER"

## 31st GENERAL CHAPTER
## RESOLUTIONS & RECOMMENDATIONS
## 29.12.2024 – 01.01.2025

# பொருளடக்கம்


முன்னுரை 02

31-வது பொதுப் பேரவையின் நிகழ்வுகள் 06

31-வது பொதுப் பேரவையின்
தீர்மானங்கள், பரிந்துரைகள் 10

இலட்சியக் கண்ணோட்டம் 34

**முன்னுரை :**

கடந்த வருடம் 2024 டிசம்பர் மாதம் 26.12.2024 முதல் 01.01.2025 வரை கிறிஸ்துவின் ஒளியில், நிறுவுநரின் வழியில், எளியோரின் தோழமையில் என்ற நேரிய இலக்கை சிந்தையிலும், நெஞ்சத்திலும் சுமந்து 31-வது பொதுப் பேரவையை எதிர்கொண்டோம். அதே வேளையில் நமது கொன்சாகா பெருங்குடும்பத்தை இறைவன் கடந்த 249 ஆண்டுகளாய் கரம் பிடித்து காலச் சூழலுக்கேற்ப நாம் பல்வேறு பணிகளை செய்திட வழிநடத்தி வருகிறார் என்பதையும் நாம் நன்றியுடன் நினைத்து பார்க்கிறோம்.

31-வது பொதுப் பேரவை நமக்கு தந்திருக்கின்ற இலக்கு மூவித செயல்களில் நம் கொன்சாகா பெருங்குடும்பம் இணைந்திருந்து துடிப்புடன் ஒரே எண்ணமாய் செயல்பட அழைப்பு விடுத்திருக்கிறது.

1. கிறிஸ்துவின் ஒளியில் பயணிப்பது
2. நிறுவுநரின் வழியில் பயணிப்பது
3. எளியோரின் தோழமையில் பயணிப்பது

**கிறிஸ்துவின் ஒளியில்...**

அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி இயேசுகிறிஸ்து. (யோவா 1:9) இவரைப் பின்தொடர்பவர் ஒருபோதும் இருளில் நடக்கமாட்டார். எனவே தான் இயேசு, யோவா 8:32-இல் "உலகின் ஒளி நானே, என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்றுரைத்தார்.

இயேசுகிறிஸ்து ஒளியாய் என்றுமே திகழ்கிறார் என்பதைத்தான் திருப்பாடல் ஆசிரியரும் இயம்புகின்றார்.

| | | |
|---|---|---|
| தி.பா. | 27:1 | : ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு. |
| தி.பா. | 119:105 | : என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே. |

மேலும் இயேசு கிறிஸ்து என்ற ஒளியை நம்பி, நமது துறவற வாழ்வை கொன்சாகா பெருங்குடும்பத்தில் நிறைவாய் வாழும்போது மத்தேயு 5:14-16-இல் நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள், மலை மேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது, உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க, என்று நம் ஒவ்வொருவரையும் நோக்கிக்கூறுவதோடு, சாட்சிய வாழ்வு வாழ பணிக்கின்றார்.

**இயேசு கிறிஸ்துவின் ஒளியின் பாதையில் பயணித்தால்...**

- நம் ஒளியாய் அவர் இருப்பதால் நாம் மீட்படைவோம்.
- நாம் பயணிக்கின்ற பாதைக்கு விளக்கொளியாய் அவரே திகழ்வதால் உலகிற்கு ஒளியாய் என்றும் திகழ்வோம் என்று நம் ஒவ்வொருவர்க்கும் உறுதியளிக்கின்றார்.

மேலும் கிறிஸ்துவின் ஒளியில் நடக்கையில்

1 யோவா 1:7 - ஒருவரோடு, ஒருவர் நட்புறவு கொண்டிருப்போம்
- நாம் தூய்மைபடுத்தப்பட்டவர்களாய் இருப்போம்

1 யோவா 2:9 - நாம் சகோதர, சகோதரிகளிடம் அன்பு கொள்வோம்
- சகோதர, சகோதரியை வெறுக்கவோ, இடறி விழ வைக்கவோ மாட்டோம்.

ஆகவே கிறிஸ்துவின் ஒளியில் தொடர்ந்து துணிவுடன் சகோதர வாஞ்சையோடு பயணிப்போம். இயேசுவைப்போல் பிறரை மன்னிப்பவராய், ஏற்றுக்கொள்பவராய், பிறர்நலம் பேணுபவராய், தீமையைக்கண்டு எதிர்ப்பவராய், அநீதிக்கு எதிராய் குரல் கொடுப்பவராய், ஏழைகளுக்கு இரங்குபவராய், பாவத்திற்காய் மனம் வருந்துபவராய், மனம்மாறி புதியவாழ்வு வாழ்பவராய், பணிவிடை செய்பவராய், நாளும் புதுபிறப்படைந்தவர்களாய் செயல்படுவோம். இத்தகைய நல்ல செயல்கள் செய்கையில் நம் ஒளி மனிதர் முன் எப்பொழுதும் ஒளிரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**நிறுவுநரின் வழியில்...**

இறைஊழியர் மைக்கேல் அன்சால்தோ 1775-ல் நமது கொன்சாகா சபையை இந்த புதுவை மண்ணில் நிறுவியது முதல் 249 ஆண்டுகள் கடந்து இன்றுவரை அவர் நமக்கு விட்டுச் சென்றுள்ள புனிதமிக்க, தியாகமிக்க, தன்னலமற்ற அன்பு பாதையை உற்றுநோக்கினால்

அந்த வழியில்...

- இறைவிசுவாசம், இறைநம்பிக்கை மிகுந்திருப்பதை
- இறைவன் மீதும் பிறர்மீதும் ஆழமான அன்பு வைத்திருப்பதை உணரமுடிகிறது. மேலும் விவேகம், நீதி, தீர்க்கதரிசன வாழ்வு இவைகளோடு எளிமை, ஆடம்பரமற்ற தூய்மையான வாழ்வு, உணவிலோ, தங்குமிடத்திலோ, உடையிலோ ஆடம்பரம் தேடாத நிலை, பதவி, பட்டங்கள், அதிகாரத்தை, பணத்தை, செல்வாக்கை தேடாத விரும்பாத வாழ்வு, சமூகத்தின் மீது அலாதியான அக்கறை, ஒடுக்கப்பட்டோர் சார்பாய் வாழ்ந்தது அதற்காக தன்னையே முழுமையாய் அர்ப்பணித்தது, உடல் நலிவுற்ற போதும் அதை பொருட்படுத்தாமல் பிறருக்காய் வாழ்ந்தது, இதுவே நிறுவுநர் இறைஊழியர் மைக்கேல் அன்சால்தோ நமக்கு முன்மாதிரியாய் சுட்டிக்காட்டும் உன்னத வழி.

இந்த உன்னதமான வழியில் உண்மையாய் நாம் பயணித்தால் புனிதத்தில் நிறைவு காண்போம். இதை மறுக்காமல், மறக்காமல் நம் ஒவ்வொருவருடையதாய் ஏற்றுக்கொண்டு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுபெற நம்மை இழப்போம். 250-வது யூபிலி கொண்டாட்டத்தில் புனிதத்தில் நிறைவு காண்பவராய் சுடர்விடுவோம்.

**எளியோரின் தோழமையில்...**

இயேசுவைப் போலும், நம் நிறுவுநர் இறை ஊழியர் மைக்கேல் அன்சல்தோ போலும் எளியோருடன் தோழமையாய் இருப்பதை எப்போதும் நம் வாழ்வில் வரவேற்போம். லூக் 4: 16-18-ல் கூறப்பட்டுள்ள இறைவார்த்தைகள் நம் ஒவ்வொருவரின் பணி பிரகடனமாய் மாறட்டும். மேலும் மத் 5:3-12-ல் கூறுவது போல் எளியோர் வாழ்வதற்காய் நம்மை, நமது பெயரை, புகழை இழக்கத் துணிவோம். மத் 25:34-40-ல் கூறியுள்ளவாறு தேவையில் இருப்போரின் தேவைகளைக் குறிப்பறிந்து நிறைவேற்றுவோம். எந்தச் செயலையும் பிரதிபலன் எதிப்பார்க்காமல் செய்வோம்.

இன்றைய சமூகத்தில் பல்வேறு வன்கொடுமைகளும், பசி, பட்டினி, போர், கலவரங்கள், வேற்றுமை உணர்வுகள், சாதிய தீண்டாமைகள், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை பணக்காரன் என்ற பாகுபாடுகள் அதன் விளைவான கொடுமைகள் மலிந்து கிடக்கின்றன.

இதே சூழல்தான் 1775-லும் புதுவை மண்ணில் நிலவியது. அன்று இச்சூழலை எதிர்க்க இயேசு காட்டிய ஒளியில் எளியோரைத் தோழமையாய் கொண்டு செயல்பட நம் நிறுவுநர் இறை ஊழியர் மைக்கேல் அன்சால்தோ இருந்தார். இன்று நம் கொன்சாகா தாய் 250 ஆண்டுகளை தொடவிருக்கும் இச்சூழலில் கொன்சாகா தாயின் புதல்வியராக ஒவ்வொருவரும் மைக்கேல் அன்சால்தோவாக இருக்க வேண்டும், வாழ வேண்டும் என நமக்கு அறைகூவல் விடுக்கின்றார்.

நம்மை இப்புனித வாழ்வுக்கு ஏற்புடையோராக்கிய இயேசுவும் இந்த புனிதமிக்க வாழ்வை கொன்சாகா சபையின் வழி எளியோருக்கு உவந்தளிக்க நம்மை புதல்வியராக்கிய நம் நிறுவுநரும் வாழ்ந்த தியாக வாழ்வை நம் கண்முன் நிறுத்துவோம்.

எளியோரின் தோழமையை வலுவுள்ளதாக்குவோம்,<br>
அவர்களின் குரலாய் ஓங்கி குரல் கொடுப்போம்,<br>
கரமாய் இணைந்து செயல்படுவோம்,<br>
பாதமாய் இலக்கு நோக்கி நடப்போம்,<br>
இதயமாய் ஈர உணர்வோடு துடிப்போம்.

இயேசு கிறிஸ்துவின் ஒளியில், நிறுவுநரின் வழியில், எளியோரின் தோழமையில் நாம் உண்மையாய், தியாக சிந்தையோடு பயணிக்க 250-ம் ஆண்டில் 31-வது பொதுப்பேரவை நம் கரங்களில் தீர்க்கமான சமூகத்தேவைக்கு பொருத்தமான தீர்மானங்களை, பரிந்துரைகளை கையடக்கமான கையேடாகத் தவழவிட்டுள்ளது.

இக்கையேட்டில் எழுதபட்டிருக்கின்ற தீர்மானங்கள், பரிந்துரைகள் ஏட்டளவில் நின்றுவிடாமல் இவை செயல்வடிவம் பெறவேண்டும். அதற்கு கொன்சாகா

பெருங்குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தனிநபராய், குழுமமாய், நிறுவனமாய், சங்கங்களாய், வட்டாரமாய், மாநிலங்களாய் மொத்தத்தில் சபையாய் ஒரே இலக்கோடு இணைந்து செயல்பட வேண்டுமென்பதை உறுதியேற்போம்.

எளியோரையும், தேவையில் இருப்போரையும், கொன்சாகா சபையையும் பிரிக்க முடியாது என்ற உறவு பந்தத்தை வலுவுள்ளதாக்குவோம்.

எந்த செயலை நாம் நினைத்தாலும், சிந்தித்தாலும், செய்தாலும் அதில் மனித மாண்பு சிதைக்கப்படாமல், குலைக்கப்படாமல், சீரழிக்கப்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வோம்.

நம் எண்ணங்கள் தூய்மையாய் இருக்கட்டும்
நம் சிந்தனைகள் கூர்மைபடுத்தப்படட்டும்
நம் செயல்கள் துணிவுடன் வெளிப்படையாய் விவேகமுள்ளதாய் அமைந்திடட்டும்.

மொத்தத்தில்,

சுவாசிக்கும் மூச்சு காற்றும்,
இதயத்தின் இதய துடிப்பும்,
யாசிக்கும் கரங்களும்,
சுமை சுமக்கும் பாதங்களும்

31-வது பொதுப்பேரவையின் இலக்கான கிறிஸ்துவின் ஒளியில், நிறுவநரின் வழியில், எளியோரின் தோழமையில் என்றும் அமைந்திட உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகின்றேன். தொடர்ந்து உங்களுக்காய் இறைவனிடம் பரிந்து பேசுகின்றேன். இறையாசீர் உங்களில், உங்கள் குழுமங்களில், பணித்தளங்களில், நம் சபையில் என்றும் தங்கட்டும்.

**புனித அசிசியின் தோழமையில் கொன்சாகாவின் புதல்வி**

**மதர். மோ. திரேசா ஞானமணி**

**பிரான்சிஸ்குவின் புனித அலோஷியஸ் கொன்சாகா சகோதரிகள் சபை**
**புதுச்சேரி**

## 31-வது பொதுப் பேரவை நிகழ்வுகள்

புனித அலோஷியஸ் கொன்சாகா சகோதரிகள் சபையின் 31-வது பொதுப் பேரவை, 26.12.2024 அன்று தேர்தல் வழி உறுப்பினர்கள் 70 பேர் மற்றும் பணி வழி உறுப்பினர்கள் 10 பேர் என 80 பேருடன் மாலை 6.00 மணி அளவில் தலைமையகத்தில் ஆரம்பமானது. சபைத்தலைவி மதர் ஞா. ராஜாமணி அவர்கள் அனைவரையும் வரவேற்று பேரவையின் நிகழ்வுகள் எவ்வாறு அமையும் என்பதையும் பேராளர்களின் பொறுப்பையும் எடுத்துக்கூறினார்கள். இரவு ஆராதனையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. 27.12.2024 அன்று காலையில் இருந்து நண்பகல் வரை பேராளர்கள் அனைவரும் ஒரு மனத்தவராய் நற்கருணை ஆராதனை செபத்தில் ஈடுபட்டனர்.

பிற்பகல் 3.00 மணியளவில் கிறிஸ்தரசர் அரங்கில் பேராளர்கள் ஒன்று கூடினர். சபை பொதுச் செயலர் சகோ. சலோமி ராணி அனைவரையும் வரவேற்றார்கள். தொடர்ந்து மதர். ஞா. ராஜாமணி, 31-வது பொதுப் பேரவையை ஒளியேற்றி முறைப்படி தொடங்கி வைத்தார்கள். சபையின் ஆன்மீகம், உருவாக்கம், நற்செய்திப்பணி, சமூகப்பணி, சமூக மாற்றப்பணி மற்றும் நலவாழ்வுப்பணி குறித்த தனது ஆறாண்டுப் பணி அறிக்கையை சமர்ப்பித்தார்கள். மேலும் 2019 – 2024 வரை சபையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளையும் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து சபையின் பொதுப் பொருளர் சகோ. செ. பாப்பாத்தி, தனது பொருளர் பணிகளுக்கான ஆறாண்டு அறிக்கையை பேரவைக்கு அளித்தார்கள். இந்த அறிக்கையில் சகோதரிகளின் தாராள உள்ளமும் கடின உழைப்பும் பாராட்டப்பட்டது. சபையின் நிதி வளம் உருவாக்கத்திற்கும் சகோதரிகளின் உடல் நலனுக்கும் பெரிதும் செலவிடப்பட்டது, மற்றும் நிலங்கள் பற்றிய தரவுகள் தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது, பேராளர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

மாலை 7.00 மணியளவில், புதுவை கடலூர் உயர் மறைமாவட்டத்தின் பொதுநிலையினருக்கான பேராயரின் பதிலி குருவும், திருச்சபை சட்ட வல்லுநருமான, அருட்தந்தை சாமிநாதன் அவர்களால் பேரவையின் நடைமுறை, சபை நிர்வாகப் பணியாளர்களின் தேர்தல் ஆகியன குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டன. தொடர்ந்து 8.30 மணியளவில் சபை சட்ட எண் 41-ன்படி 31-வது பொதுப் பேரவையின் வாக்கு ஆய்வாளர்களாக சகோ. செ. பாப்பாத்தி, சகோ. தி. ஆரோக்கிய மேரி ஆகியோரும், பதிவாளராக சகோ. ஜோனா மரிய செல்வியும் பேராளர்களால் வாக்கெடுப்பின் வழி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

28.12.2024 அன்று காலை பேராளர்கள் புதிய நிர்வாகக் குழுவினரை தேர்ந்தெடுக்க இறையருள் வேண்டினர். தூய ஆவியானவரின் அருட்பொழிவிற்கான திருப்பலியை புதுவை கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட், அவர்கள் நிறைவேற்றி சபைக்காகவும், சபையின் நிர்வாகப் பணியாளர்களின் தேர்தல் மற்றும் பொதுப் பேரவை சிறப்பாக நடைபெறவும் செபித்தார். தொடர்ந்து பேராளர்கள் படைப்பாளராம் தூய ஆவியே வாரும் என்ற பாடலைப் பாடி ஆவியானவரின் அருட்பொழிவினை வேண்டினர். சபையின் அமைப்புச் சட்டம் மற்றும் வழிமுறை கூறும் நடைமுறைப்படி 31-வது பொதுப் பேரவையின் பேராளர்கள், நடைபெற்ற தேர்தலில் வாக்களித்ததின் வழி, சபையின் மைய நிர்வாகப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இத்தேர்தல் மூலம்,

| | | |
|---|---|---|
| **சபைத்தலைவி** | - | **மதர் மோ. திரேசா ஞானமணி** |
| **உதவி சபைத்தலைவி** | - | **சகோ. பசல மரியம்மா** |
| **முதல் ஆலோசகர்** | - | **சகோ. க. ரேவதி** |
| **இரண்டாம் ஆலோசகர்** | - | **சகோ. ஆ. ஜெபமாலை மேரி** |
| **மூன்றாம் ஆலோசகர்** | - | **சகோ. செ. பாப்பாத்தி** |
| **சபை பொருளர்** | - | **சகோ. அ. பவுலின் சகாய ராணி** |

தேர்ந்தெடுக்கப்பட்டனர். சபையின் அமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதலின் படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகப் பணியாளர்களின் ஒப்புதல் பெற்ற பின்னர், அவர்களும் பேராளர்களின் முன்னிலையில் தங்களது உறுதி மொழியைப் பதிவு செய்தார்கள்.

29.12.2024 அன்று பேரவையின் பதிவாளர் சகோ. ஜோனா மரிய செல்வி முந்தைய நாளின் நிகழ்வுகளை அறிக்கையாகத் தயாரித்து பேரவைக்கு சமர்ப்பித்தார்கள். தொடர்ந்து புதிய நிர்வாகக் குழுவினர் கரங்களில் எரியும் மெழுகுத் திரியை ஏந்தியவர்களாக பேராளர்கள் அனைவருடனும் இணைந்து தலைமையகச் சிற்றாலயத்திற்குச் சென்றனர். வரும் ஆறு ஆண்டுகள் சபையை புதிய நிர்வாகக் குழுவினர் சிறப்பாக வழிநடத்த அனைவரும் செபித்தனர். தொடர்ந்து பேரவையின் நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடைபெற்றன.

2019 – 2024 வரை சபையை பல்வேறு பணிகளின் வழியாக நடத்திச் சென்ற மேனாள் நிர்வாகக் குழுவினர் தங்களது பணி அறிக்கையினை பேரவையில் சமர்ப்பித்தார்கள்.

| | | |
|---|---|---|
| சகோ. **M.** திரேசா ஞானமணி | - | உருவாக்கம் மற்றும் ஆன்மீகம் |
| சகோ. **A.** ஆண்டனி மரிய ஜான்சி | - | கல்விப்பணி |
| சகோ. **D.** ராணி | - | நற்செய்திப்பணி |
| சகோ. **A.** மரிய ஸ்டெல்லா | - | சமூக வளர்ச்சிப்பணி, சமுதாய மாற்றப்பணி மற்றும் நலவாழ்வுப்பணி |

இந்த அறிக்கைகள் பேராளர்களால் பாராட்டப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. மதர் மோ. திரேசா ஞானமணி தலைமையில் சகோ.ஜெயராஜ் திஇச, வழிநடத்த பேரவையின் 2-ம் கட்ட நடைமுறைகள் 29.12.2024 - 01.01.2025 வரை நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் காலை திருப்பலி, அமர்வுகளுக்கு முன்பாக செபம், மாலை நற்கருணை ஆராதனை என அனைத்தும் செபக் குழுவினரால் சிறப்பாக தயாரிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டது. நாளின் நிகழ்வுகள் அனைத்தும், பேரவையின் பதிவாளர் சகோ. ஜோனா மரிய செல்வி மற்றும் அந்த நாளின் செயலர்களால் தொகுக்கப்பட்டு பேராளர்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டன. அவை பேராளர்களால் பாராட்டப்பட்டதுடன், சிறு, சிறு திருத்தங்கள் வழங்கப்பட்டு சரி செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு அமர்விலும் சகோ. ஜெயராஜ் திஇச, அந்தந்த பணிகள் குறித்த ஒளியூட்டக் கருத்துகள் வழங்கினார். தொடர்ந்து பேராளர்கள் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு பணிகள் குறித்தும் குழு விவாதத்தில் ஈடுபட்டனர். பேரவைக்கான பல்வேறு கட்ட தயாரிப்புகளின் மூலம் சகோதரிகளிடம் பெறப்பட்ட கருத்துருக்கள் பேரவை தயாரிப்புக் குழுவினரால் தொகுக்கப்பட்டு பரிந்துரையாக பேராளர்கள் முன் வைக்கப்பட்டன. இவையும் பேராளர்களால் மீண்டும் பரிசீலிக்கப்பட்டன. பல்வேறு விளக்கங்கள், தெளிவுகளுக்குப் பின், தீர்மானங்களாக, பரிந்துரைகளாக பேராளர்களால் வாக்களிக்கப்பட்டு ஏற்கப்பட்டன. இதில் வரும் ஆறு ஆண்டுகளுக்கு சகோதரிகளின் வாழ்வையும், பணிகளையும் நெறிப்படுத்தும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அர்ப்பண வாழ்வு, ஆன்மீகம், வார்த்தைப்பாடுகள், குழுமவாழ்வு, உருவாக்கம், இளந்துறவுநிலை,தொடர் உருவாக்கம், கல்விப்பணி, திருத்தூதுப்பணி, சமூக மாற்றப்பணி, சமூக வளர்ச்சிப்பணி, நலவாழ்வுப்பணி, நிதி நிர்வாகம், நிர்வாகம் குறித்துப் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பேராளர்களால் இலட்சியக் கண்ணோட்டம் எழுதப்பட்டு பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பேராளர்களுடன் சிறப்பு அழைப்பாளர்களும் இணைந்து தீர்மானங்கள், பரிந்துரைகள் உருவாக்குவதிலும், இலட்சியக் கண்ணோட்டம் தயாரிப்பதிலும் முக்கிய பங்காற்றினார்கள்.

31-ஆம் தேதி இரவு தலைமையக சிற்றாலயத்தில் நன்றி வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து தலைமையகத்தின் ஆன்மீக குரு அருட்தந்தை பீட்டர் ராஜேந்திரன் அவர்களால் புத்தாண்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்குப்பின், கிறிஸ்தரசர் அரங்கில் அனைவரும் ஒன்று கூடி, கேக் வெட்டி புத்தாண்டு வாழ்த்துகளை ஒருவர் ஒருவருடன் பகிர்ந்து கொண்டனர்.

ஜனவரி 1, 2025, காலை அமர்வில் அனைத்து பரிந்துரைகளும் மீண்டும் ஒரு முறை சிறு விவாதத்திற்கு விடப்பட்டு வாக்களிப்பிற்கு விடப்பட்டது. இதன் மூலம் வரும் ஆண்டுகளும் சபையின் போக்கை நிர்ணயிக்கும் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் பேராளர்களால் நிர்ணயிக்கப்பட்டன. இலட்சியக் கண்ணோட்ட வரைவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

31-வது பேரவையின் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்த சகோ. ஷைலஜா அக்கினப்பள்ளி, சபை நிறுவனரின் புனிதர் பட்ட நிகழ்வின் முதன்மை வேண்டுகையாளராக இருந்து செயல்பட்ட தனது பணி அனுபவங்களையும், இறை ஊழியர் மைக்கேல் அன்சால்தோ ஏற்படுத்திய தாக்கங்களையும் விளக்கமாக, தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.
சகோ.ஜெ.ஷாலினி ஷைலஜா, சபையின் பொதுச் செயலராக நிர்வாகக் குழுவினரால் நியமிக்கப்பட்டதை சபைத் தலைவி மதர். மோ. திரேசா ஞானமணி பேரவைக்கு அறிவித்தார்கள்.

மாலை 4.30 மணிக்கு சபைத்தலைவி மதர் மோ. திரேசா ஞானமணி, பேரவையை நிறைவுக்குக் கொண்டு வந்ததோடு தொடர்ந்து ஆறு ஆண்டுகளும் சபையின் அனைத்து நிலைகளிலும் திரு அவை கிறிஸ்துவோடு இணைந்து செயல்படுவதுபோல நமது இலக்கைக் கண்முன் கொண்டு அனைவரும் இணைந்து பயணிக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்கள். நமது சபையின் 31-வது பொதுப் பேரவை 2025 யூபிலி ஆண்டிலே நம்பிக்கையின் திருப்பயணிகளாக நாம் பயணிக்க அழைக்கும் ஒரு பாஸ்கா அருள் நிகழ்வாக அமைந்தது. 31-வது பேரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பரிந்துரைகள் நமது சபைக்கான அரிய பொக்கிஷமாக அமைந்தன. தொடர்ந்து அனைவரும் தலைமையகத்தின் சிற்றாலயத்திற்குச் சென்று நற்கருணை ஆண்டவர் முன்னிலையில் உறுதி பெற்றவர்களாய் இறையாசீரைப் பெற்றனர்.

மீண்டும் அனைவரும் பேரவை அரங்கிற்கு வந்தனர். இறுதி நிகழ்வாக மேனாள் நிர்வாகக் குழுவினருக்கு நன்றி கூறுதலும் புதிய நிர்வாகக் குழுவினருக்குப் பாராட்டுதலும் அனைத்துப் பேராளர்களாலும் அருகிலுள்ள இல்லங்களிலுள்ள சகோதரிகளாலும் வழங்கப்பட்டன. மேனாள் நிர்வாகக் குழுவினர் நிர்வாகப் பொறுப்புகளை ஒப்படைக்கும் விதமாக அடையாளப் பொருட்களைக் கொடுத்தனர். அனைத்து நிகழ்வுகளும் திட்டமிட்டபடி, சிறப்பாக நிறைவு பெற்றன.

**FRANCISCAN SISTERS OF SAINT ALOYSIUS GONZAGA**
**PUDUCHERRY**

## "ACCOMPANYING THE POOR, IN THE LIGHT OF CHRIST AND IN THE FOOTSTEPS OF OUR FOUNDER"

**31st GENERAL CHAPTER**
**Date: 29.12.2024 – 01.01.2025**

## RESOLUTIONS - தீர்மானங்கள்

| S.No | TITLE |
|---|---|
| | **CONSECRATED RELIGIOUS LIFE - அர்ப்பண வாழ்வு** |
| 1. | Form groups to deepen our charism in response to the signs of the times. Share their insights and initiatives with all our sisters through the General and Province newsletters. Additionally, organize seminars on our charism at both General and Province levels. |
| | காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப நமது சபையின் தனிவரத்தைக் கூர்மைப்படுத்த ஒரு குழுவை அமைத்து தனிவரம் பற்றிய பல்வேறு கருத்துக்களை சகோதரிகளுக்கு எழுத்து வடிவில் மைய, மாநில செய்திமலர் வழியாக அனுப்புகிறோம். தனிவரம் பற்றிய கருத்தரங்குகளை மையம்,மாநிலம் வழியாக நடத்துகிறோம். |
| 2. | A group of sisters will compile and document the witnessing life of our deceased sisters and publish them as a book within six years. All our sisters are asked to write their autobiographies and submit them to their respective Provinces. |
| | சபை அளவில் ஒரு குழு அமைத்து சாட்சிய வாழ்வு வாழ்ந்து இறந்த நம் மூத்த அன்னையர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி, 6 ஆண்டுகளுக்குள் புத்தகமாக்குகிறோம். மேலும் அனைத்து சகோதரிகளும் தங்களது வரலாற்றை எழுதி அவரவர் மாநிலங்களில் ஒப்படைப்பர். |

| S.No | TITLE |
| --- | --- |
| **SPIRITUALITY - ஆன்மீகம்** | |
| 1. | Organize pilgrimage to nearby shrines in celebration of the 250th Jubilee Year of FSAG. |
| | **FSAG-250வது யூபிலி ஆண்டினை முன்னிட்டு அந்தந்த இல்லங்களுக்கு அருகில் உள்ள புனிதத் தலத்திற்கு திருப்பயணம் மேற்கொள்கிறோம்.** |
| 2. | In remembrance of the 250th Jubilee Year of FSAG, the sisters in the communities will hold a 24 hours chain-rosary or adoration every three months at the Congregation level. |
| | **FSAG – 250வது யூபிலி ஆண்டினை முன்னிட்டு மூன்று மாதத்திற்கு ஒருமுறை சபை அளவில் குழும சகோதரிகள் அனைவரும் 24 மணி நேர தொடர் செபமாலை / ஆராதனையில் ஈடுபடுகிறோம்.** |
| 3. | In commemoration of the 250th Jubilee Year of FSAG, the Generalate and Provinces will collaboratively release short videos daily highlighting our life and ministry. |
| | **FSAG– 250வது யூபிலி ஆண்டினை முன்னிட்டு நமது பணிகள், வாழ்வு குறித்து தினமும் ஒரு சிறிய வெளியீட்டை (Shorts) சமூக வலை தளத்தில் வெளியிட மையமும், மாநிலமும் இணைந்து செயல்டுகிறது.** |
| 4. | To promote and implement the spirituality of St. Francis of Assisi, short videos will be collected and uploaded on YouTube at the Province level. One-page article will be written and disseminated through the newsletter. This initiative will be carried out collaboratively by both the Generalate and the Provinces. |
| | **அசிசியாரின் ஆன்மீகத்தை நடைமுறைப்படுத்த அசிசியாரைப் பற்றி குறும் படங்களைத் தொகுத்து யூ-டியூப்-ல் மைய மாநில அளவில் பதிவேற்றம் செய்கிறோம். அதை ஒரு பக்க கட்டுரையாக எழுதி சுற்று மடல்கள் வழியாக வெளியிடுகிறோம். மையமும் மாநிலமும் இணைந்து செயல்படுகிறது.** |

| S.No | TITLE |
| --- | --- |
| 5. | The provinces actively take initiatives to disseminate Papal Bulletins and documents promptly. Sisters who have pursued theology should willingly step forward to assist in this task. Summaries of these documents in Tamil will be shared with the communities through newsletters, and the sisters will read them during their evening gatherings. |
| | அவ்வப்பொழுது வெளிவரும் திருத்தந்தையின் சுற்றுமடல் மற்றும் கடிதங்களை வெளியிட மாநிலம் பொறுப்பேற்கிறது. அதனைசெயல்படுத்த இறையியல் பயின்ற சகோதரிகள் முன்வருகின்றனர். அவர்கள் அதன் தமிழ் சுருக்கத்தை மாநிலங்கள் வழியாக குழுமங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். அவற்றை சகோதரிகள் மாலை நேரங்களில் வாசித்து பயன் அடைவர். |
| 6. | To deepen knowledge, enrich experience, and propagate the values and history of our Founder, Servant of God Michael Ansaldo, articles will be prepared and shared with the communities in the form of a handbook and uploaded on the website. At the Generalate level, sisters will be encouraged to write and publish research articles about our Founder. |
| | இறை ஊழியர் மைக்கேல் அன்சால்தோவின் புண்ணியங்கள் மற்றும் வரலாற்றை அனைவரும் அறிந்து, அனுபவித்து அறிவிக்க கட்டுரைகள் மைய அளவில் தயார்செய்து மூன்றுமாதத்திற்கு ஒருமுறைக் கையேடு வடிவிலும் இணையத்தளத்திலும் பதிவிடுகிறோம். சபை அளவில், விருப்பமுள்ள சகோதரிகளுக்கு இறை ஊழியர் மைக்கேல் அன்சால்தோ பற்றி தெளிவு கொடுத்து ஒவ்வொரு தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரை வெளியிட ஊக்கப்படுத்துகிறோம். |

| S.No | TITLE |
|---|---|
| 7. | A group of sisters from the Generalate and Provinces will prepare reflection points for monthly recollection and share them with the communities through a newsletter for the next six years.<br><br>மைய மற்றும் மாநில அளவில் ஒரு குழு அமைத்து மாதாந்திர கருத்தமைதி நாளுக்கான கருத்துருக்களை தயார் செய்து, அதனை அடுத்து வரும் 6 ஆண்டுகளுக்கு சுற்றுமடல் வழியாக இல்லங்களுக்கு அனுப்புகிறோம். |
| 8. | A Media Committee comprising one sister from each Province. This committee will be responsible for creating videos of all the celebrations and events related to our Congregation's ministries. These videos will be uploaded to the YouTube channel of our Animation Centre. The committee will ensure the quality and standards of the videos uploaded.<br><br>ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு சகோதரியை தேர்ந்தெடுத்து சபை அளவில் ஓர் ஊடகக்குழு அமைத்து சபையின் முக்கிய விழாக்கள் மற்றும் பணிகள் சம்பந்தமான நிகழ்வுகளை ஒளிப்படப் பதிவுசெய்து சபைக்கென்று உள்ள ஊடக மையத்தில் யூ-டியூப் வழியாக பதிவேற்றம் செய்கிறோம். இக்குழுவே இதன் தரத்தை உறுதி செய்கிறது. |
| **COUNSELS OF PERFECTION - வார்த்தைப்பாடுகள்** | |
| 1. | Refrain from using mobile phones between 10:00 p.m. and 6:00 a.m. Avoid using them during Eucharistic celebrations, community meetings, recreations, meditation times, and in the refectory.<br><br>தினந்தோறும் அலைபேசியை இரவு 10.00 மணிமுதல் மறுநாள் காலை 6.00 மணிவரை பயன்படுத்துவதைத் தவிர்க்கிறோம். மேலும் திருப்பலி, இல்லக்கலந்துரையாடல், மனமகிழ்வு நேரம், தியான நேரம், மற்றும் உணவு அறைகளில், அலைபேசி பயன்படுத்துவதை தவிர்க்கிறோம். |

<table>
<tr><th>S.No</th><th>TITLE</th></tr>
<tr><td rowspan="2">2.</td><td>Sisters shall be allowed to wear colour sarees or salwar during travels.</td></tr>
<tr><td>புடவை அணியும் சகோதரிகளுக்குப் பயணத்திற்கான உடை (புடவை / சுடிதார்) உடுத்த அனுமதிக்கிறோம்.</td></tr>
<tr><td colspan="2">COMMUNITY LIFE - குழுமவாழ்வு</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td>Let us foster Communion by avoiding divisions based on caste, native or language, and instead embrace our shared identity as Gonzaga sisters.</td></tr>
<tr><td>நமதுசபையில் சாதியின் அடிப்படையிலோ, ஊரின் அடிப்படையிலோ அல்லது மொழியின் அடிப்படையிலோ, மாநிலத்தின் அடிப்படையிலோ வேற்றுமை பார்ப்பதைத் தவிர்த்து, அனைவரும் கொன்சாகா சபை சகோதரிகள் என்ற மனநிலையில் இணைந்து வாழ்கிறோம்.</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td>Celebrate March 19, the Feast of St. Joseph, as Community Day in collaboration with nearby communities. Organize meaningful competitions among sisters, celebrating their talents with recognition and prizes. Plan an annual tour to strengthen bonds and create joyful memories.</td></tr>
<tr><td>அருகாமையில் உள்ள இல்லங்கள் இணைந்து மற்றும் சங்கங்கள் வாரியாக இணைந்து புனித யோசேப்பு திருநாள் மார்ச் 19 அன்று குழும நாளாக (Community Day) சிறப்பிக்கின்றோம். சகோதரிகளுக்கிடையே போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுகிறோம். வருடத்திற்கு ஒருமுறை இன்பச் சுற்றுலா செல்கிறோம்.</td></tr>
</table>

| S.No | TITLE |
| --- | --- |
| **FORMATION - உருவாக்கம்** | |
| 1. | Personal contact with girls will promote vocation to our Congregation. Organize Vocation Promotion camps twice a year, and appoint a sister as a vocation promoter in every institution. |
| | நமது மற்றும் பிறகல்வி நிறுவனங்களில் படிக்கும் இளம் பெண்களை சந்தித்து, தேவ அழைத்தலுக்கான உற்சாகம் அளித்து வருடத்திற்கு இரண்டு முறை முகாம் நடத்துகிறோம். ஒவ்வொரு கல்வி நிறுவனத்திற்கும் ஒரு சகோதரியை தேவ அழைத்தல் பொறுப்பாளராக நியமிக்கிறோம். |
| 2. | In each community, sisters should actively motivate young girls in parishes and vicariates and conduct vocation camps. Designate a sister in every community to serve as a vocation promoter. |
| | ஒவ்வொரு குழுமத்தினரும் அவரவர் பணியாற்றும் பங்குத்தளத்தில் / மறைவட்டத்தில் தேவ அழைத்தல் குறித்துப் பேசுகிறோம் - அதற்கென முகாம் நடத்துகிறோம். ஒவ்வொரு குழுமத்திலும் சகோதரி ஒருவரை தேவ அழைத்தல் ஊக்குநராக நியமிக்கிறோம். |
| 3. | Foster dialogue with friends, relatives, and those we encounter to identify and encourage young girls with a vocation. To enhance vocations within the Congregation, let each province work collaboratively towards this shared mission. |
| | நமது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொடர்பில் உள்ளவர்களிடம் உரையாடி தேவ அழைத்தலில் ஆர்வமுள்ள இளம் பெண்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துகிறோம். நமது சபையின் தேவ அழைத்தலை அதிகப்படுத்த ஒவ்வொரு மாநிலமும் இணைந்து பணியாற்றுகிறது. |

| S.No | TITLE |
|---|---|
| 4. | To promote vocations sisters incharge shall prepare a documentary film highlighting the rich history of our Congregation.<br><br>தொலைத்தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்தியும், சபை வரலாற்றின் ஆவணப்படத்தைக் காண்பித்தும் தேவ அழைத்தலை அதிகப்படுத்துகிறோம். |
| 5. | Encourage junior sisters to document their Divine Call by creating short films. These films can be uploaded to the Congregation's YouTube channel, reaching and inspiring a broader audience.<br><br>இளம் சகோதரிகளை ஊக்குவித்து தங்களது அழைத்தல் வாழ்வை குறு ஒளிப்படப் பதிவு செய்து சபையளவிலுள்ள யூ-டியூப் Channel-லில் பதிவேற்றம் செய்ய வைக்கிறோம். |
| **JUNIORATE - இளந்துறவுநிலை** | |
| 1. | Organize a get-together for junior sisters at the Congregation level once in every three years and at the Province level annually.<br><br>சபையளவில் 3 ஆண்டிற்கு ஒரு முறையும் மாநில அளவில் ஆண்டிற்கு ஒரு முறையும் இளம் சகோதரிகளுக்கான கூடுகை நடத்துகிறோம். |
| 2. | The community Superior should engage in a meaningful dialogue with the junior sisters to strengthen their vocation and guide them in adhering to the rules and regulations of the Congregation.<br><br>ஒவ்வொரு மாதமும் இளம் துறவியருடன் துறவுவாழ்வு குறித்து இல்லத்தலைவி கலந்துரையாடி, இளந்துறவியர் தம் அர்ப்பணவாழ்வை ஆழப்படுத்தவும் சபை ஒழுங்குகளை கடைபிடிக்கவும் வழிகாட்டுகின்றனர். |

| S.No | TITLE |
|---|---|
| 3. | During gatherings, senior sisters should share their faith experiences and highlight the growth and achievements of the Congregation to inspire the junior sisters. |
| | மூத்த அன்னையர்கள் தங்கள் விசுவாச வாழ்வு மற்றும் சபை வளர்ச்சி பற்றிய அனுபவங்களை இளம் சகோதரிகளிடம் அவர்களது கூடுகையின் போது பகிர்ந்து கொள்கிறார்கள். |
| **ONGOING FORMATION - தொடர் உருவாக்கம்** | |
| 1. | Provide proper guidance to sisters who experience mid-age challenges by sending them to counselling centres. |
| | சகோதரிகள் தங்களின் நடுத்தர வயதில் (35-60) எழும் சிக்கல்களை முறையாகக் கையாள்வதற்கு பயிற்சி மையங்களுக்கு அனுப்பி வழி காட்டுகிறோம். |
| 2. | Encourage sisters to undertake counselling, leadership courses, and discernment training to support their personal and professional growth. |
| | உளவியல் பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி, தேர்ந்து தெளிதல் பயிற்சி போன்ற சிறப்பு பயிற்சிகளுக்கு சகோதரிகளை அனுப்புகிறோம். |
| **EDUCATION - கல்விப்பணி** | |
| 1. | Establish Nursing and Pharmacy colleges to broaden professional educational opportunities. |
| | செவிலியர் மற்றும் மருந்தியல் கல்லூரி தொடங்குகிறோம். |
| 2. | Send five sisters annually (with D.T. Ed. or B.Ed. qualifications) for offline and online TET coaching. |
| | ஒவ்வொரு வருடமும் ஐந்து இடைநிலை ஆசிரியர் மற்றும் இளங்கலை கல்வியியல் படிப்பு முடித்த சகோதரிகளுக்கு ஆசிரியர் தகுதித் தேர்விற்கான பயிற்சி நேரடி மற்றும் நிகழ் நிலை வகுப்புகள் வழியாகக் கொடுக்கிறோம். |

| S.No | TITLE |
|---|---|
| 3. | Establish CBSE schools in places where Human and Land Resources are available. |
| | இடவசதியும், நிலவளமும், மனித வளமும் உள்ள இடங்களில் **CBSE** பள்ளிகளைத் தொடங்குகிறோம். |
| 4. | Regularly update and maintain the history of all schools and institutions. Share these updates on YouTube channels to promote their legacy to the Public. |
| | நமது பள்ளி மற்றும் நிறுவனங்களின் வரலாற்றை, வலையொளி மூலம் பதிவேற்றம் செய்கிறோம். |
| 5. | Conduct 10-days spoken English training once in every six months for sisters teaching in schools. Arrange digital skills training every six months, facilitated by experts. Provide topics to speakers well in advance. The schools will take the responsibility for it. |
